<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு</u>

**<u>CC No.114/2023</u>**

அ.சா.– 1 திருமதி. ஜெகதீஸ்வரி க/பெ. கோபிராஜ் நாள்–29.11.2024

எதிரி ஆஜர்.

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பிபிஏ படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். எதிரியை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் எதிரி எனது கணவரின் உறவினர் எனக்கு திருமணம் ஆன நாளிலிருந்து தெரியும். எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் பலவிதமான தொழில்களை செய்கிறார். என்னிடம் எப்போது பணம் வாங்கினார் என்றால் 20.02.2023 ல் கடன் வாங்கினார். எங்கு வைத்து எதிரி பணம் வாங்கினார் என்று கேட்டால் எதிரியின் வீட்டில் வைத்து ரொக்கமாக பணம் கொடுத்தேன். மனுவில் கூறியுள்ளது போல் ரூ.8 லட்சம் கொடுத்தேனா என்றால் ஒரே நாளில் இருமுறை தனிதனியாக கொடுத்தேன்.

காசோலை எந்த தேதியில் கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் கடன் பெற்ற அன்றே கொடுத்தார். இரு காசோலைகள் கொடுத்தார் என்றால் சரிதான். ரூ.8 லட்சம் ஒரே நாளில் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் நகையை அடமானம் வைத்து கொடுத்தேன் அதற்கான இரசீது என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் என்னை கேட்கவில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ எந்த தேதியில், எந்த இடத்தில் கொடுத்தேன் என்ற விவரங்களை கூறியுள்ளேனா என்றால் என்னை கேட்காததால் தான் நான் கூறவில்லை. யார் என்னை அந்த விவரம் கேட்கவில்லையென்று கேட்டால் நீதிமன்றத்தில் கேட்கவில்லை வழக்கறிஞரிடம் விவரங்களை கூறியுள்ளேன்.

எனது வழக்கறிஞர் அறிவிப்பு அதசாஆ 3 னை நான் சொன்ன விவரங்களின் அடிப்படையில் தான் எனது வழக்கறிஞர் அனுப்பினார் என்றாலும் அதை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆம். வழக்கறிஞர் அறிவிப்பில் தேதி மற்றும் பணம் கொடுத்த இடம் ஏன் குறிப்பிடவில்லையென்று எனது வழக்கறிஞரிடம் நான் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை

அதற்காக காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும், நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அவ்வாறு எதிரி பணம் பெற்றிருந்தால் தேதி மற்றும் பணம் பெற்ற இடம் ஆகிய விவரங்களை எனது அறிவிப்பில் கூறியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் கருப்பு மையினால் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் உள்ள மற்ற விவரங்கள் புளூ மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் பின்புறம் உள்ள கையொப்பம் யாருடையது என்று கேட்டால் எதிரியின் மாமாவுடையது. பொதுவாக காசோலையை வங்கியில் தாக்கல் செய்யும் போது தாக்கல் செய்யும் நபரின் கையொப்பம் தான் காசோலையின் பின்புறம் போடப்படும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு காசோலையானது எதிரியின் மாமா தேவதாஸிற்கு கொடுப்பதற்காக எதிரி வைத்திருந்த காசோலை என்று சொன்னால் சரியல்ல ஒரு ஆதாரத்திற்காக தான் தேவதாஸிடம் கையொப்பம் பெற்றேன். மேற்படி விவரங்களை நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி விவரத்தை புகாரில் கூறியுள்ளேனா என்றால் புகாரில் மாமாவும் கடன் வாங்கும் போது இருந்தார் அவரிடம் கையொப்பம் வாங்கியுள்ளேன் என்று கூறியுள்ளேன்.

நான் புகாரில் அந்த விவரங்களை கூறவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது ஆங்கிலத்தில் உள்ளது வழக்கறிஞரிடம் நான் அந்த விவரங்களை கூறினேன். இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது எதிரி காசோலையை தடய அறிவியல் துறைக்கு அனுப்ப வேண்டும் என்று மனு எண்.1/2023 தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதற்கு எனது வழக்கறிஞர் மூலமாக பதில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பதில் மனுவில் உள்ள விவரங்கள் நான் கூறியபடி தான் உள்ளது என்பதை உறுதி செய்து கொண்ட பிறகு தான் அந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பதில் மனுவில் 2017 ம் ஆண்டு எதிரி கடன் வாங்கியதாகவும், அதற்கு காசோலை கொடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு கூறவில்லை. மேலும் எனது பதில் மனுவில் காசோலையில் கையெழுத்து மட்டும் எதிரி போட்டு கொடுத்தார் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் அவ்வாறு நான் சொல்லவில்லை எதிரி ஒரு காசோலையை பூர்த்தி செய்தும் மற்றொரு காசோலையில் கையெழுத்து மட்டும் செய்து கொடுத்தார். 2017 ல் நான் காசோலை வாங்கவில்லை.

எதிரி தரப்பில் 2017 ல் காசோலை கொடுக்கப்பட்டதாக நான் பதில் மனுவில் ஒப்பு கொண்டதால் தான் தடய அறிவியல் நிபுணருக்கு காசோலை அனுப்ப வேண்டும் என்று தாக்கல் செய்த மனு திரும்ப பெறப்பட்டது என்றால் அவ்வாறு நான் ஒப்பு கொள்ளவில்லை அது பொய்யான விவரம். அந்த விவரங்கள் எனது வழக்கறிஞருக்கு தெரியும் நானும் விவரங்களை தெரிந்து கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2017 ல் நான் காசோலை பெறவுமில்லை 2017 ல் நான் கடன் கொடுக்கவும் இல்லை. என்னை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக 2017 ம் ஆண்டிற்குண்டான பழைய காசோலையை கொடுத்துள்ளார்கள். இந்த விவரத்தை நான் எனது வழக்காவணங்களில் கூறியுள்ளேனா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது வழக்கிற்கு வந்த பிறகு தான் தெரிந்து கொண்டேன். எதிரி நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு ஒரு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் எதிரி என்ன கூறியிருந்தார் என்ற விவரங்களை நான் வழக்கறிஞர் மூலமாக தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பதில் அறிவிப்பில் 2017 ல் தொடக்கத்திலேயே அவரது கையொப்பம் இடப்பட்ட காசோலைகள் காணாமல் போய்விட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்பதை நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். எதிரி சொன்ன விவரங்கள் பொய்யானது என்று மறுத்து மீண்டும் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன். அவ்வாறு நான் அனுப்பிய அறிவிப்பினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனோ என்றால் தெரியாது. அவ்வாறு நான் எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அவ்வாறு அனுப்பியிருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அனுப்பாததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

புகாரில் எதிரி பதில் அறிவிப்பில் 2017 ல் தான் தன்னுடைய காசோலை காணாமல் போன விவரங்கள் பொய்யானது என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அவ்வாறு நான் எதுவும் சொல்லவில்லை வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் இல்லை. வருமானவரி சட்டத்தின்படி ரூ.2 இலட்சத்திற்கு மேல் ரொக்கமாக பண பரிவர்த்தனை செய்வது தவறு என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது நாங்கள் வாடிக்கையாக நகை வைத்து பணம் பெறுவோம். வருமானவரி சட்டத்தின்படி ஒரே தேதியில் ரூ.8 லட்சம் பணம் கொடுத்தது சட்டத்திற்கு புறம்பானது என்று

சொன்னால் சரியல்ல. எதிரிக்கு எப்போதும் கடன் கொடுப்பதில்லை அவர் கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்பட்டதுமில்லை என்று சொன்னால் சரியல்ல. 2017 ம் ஆண்டு எனது கணவரால் எதிரி வீட்டிலிருந்து எடுத்து வரப்பட்ட காசோலையை பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரின் பெயரில் அப்போதே புகார் கொடுத்திருக்கலாமே? எனது கணவர் காசோலை எடுத்த விவரம் வழக்கறிஞர் அறிவிப்பு வரும் போது தான் எதிரிக்கு தெரிய வந்தது என்றாலும், அதை தான் பதில் அறிவிப்பில் கூறியுள்ளார் என்றாலும் பொய்யான விவரம் எனது கணவர் இந்த வழக்கினால் மன உளைச்சலாகி இறந்துவிட்டார் அதனால் பொய்யாக கூறுகிறார். நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த புகார் மனுவானது எதிரிக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும், எதிரியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த புகார் மனுவில் எந்தவிதமான முகாந்திரமும் இல்லையென்றாலும் புகார்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.